பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 ஐப்பசி 09 ஞாயிற்றுக்கிழமை (26-10-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 312

## பொதுநலவாய உச்சிமாநாட்டு மண்டபத்துக்கு வெளியே இலங்கை தமிழர் நேற்று ஆர்ப்பாட்டம்

### லண்டனிலிருந்து ரயிலிலும், பஸ்களிலும் எடின்பரோ வந்தனர்

லண்டன், ஒக். 26

ஸ்கொட்லாந்தின் தலைநகர் எடின்பரோவில் காமன்வெல்த் நாடுகளின் உச்சிமாநாட்டின் இரண்டாவது நாளான நேற்று இலங்கைத்தமிழர்கள் ஈழக் கொடியை ஏற்றியதுடன் ஆர்ப்பாட்ட நடவடிக்கையிலும் ஈடுபட்டனர்.

சுமார் 600 இலங்கைத் தமிழர்கள் இவற்றில் கலந்து கொண்டனர்.

லண்டனில் இருந்து விசேட ரயில் ஒன்றிலும் இரு பஸ்களிலும் இவர்கள் எடின்பரோ நகர் வந்திருந்தனர்.

லண்டனில் இருந்து புறப்பட்ட இந்த ரயில் ஸ்கொட்லாந்தின் வெவேளி ரயில் நிலையத்தில் நிறுத்தப்பட்டது. பஸ்களில் புறப்பட்டவர்களும் அங்கு வந்து சேர்ந்தனர்.

அங்கு நாதஸ்வரம் மற்றும் ஸ்கொட்டிஷ் இசைக் கருவியான பைப் இசை முழங்க அவர்கள் எடின்பரோ நகரின் முக்கிய வீதிகள் வழியாக மெடோவாக் என்ற இடத்தை அடைந்தனர்.

ஈழக் கொடியும் ஸ்கொட்லாந்து தேசியக் கொடியும் அங்கு ஏற்றி வைக்கப்பட்டன.

கொடியேற்ற விழாவுக்கு வருவதாக இருந்த ஸ்கொட்லாந்து எம். பி பெனிஸ்கனோவான் என்பவர் தவிர்க்க முடியாத காரணங்களால் வர முடியவில்லை என்று பீ. பி. ஸி தெரிவித்தது.

அதன் பின்னர் இவர்களில் 200 பேர் கொண்ட குழு ஒன்று எடின்பரோ நகரில் பொதுநலவாய நாடுகள் உச்சி மாநாடு நடைபெறும் இடத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

### முச்சந்தி முரளி



அப்ப போர் நீடிக்கும் வரை மன்னிப்பும் நீடிக்கும் போல......!

### சரத்முனசிங்க கூறும் காரணம்

நேற்று கொழும்பில் நடத்தப்பட்ட தேடுதல் ஓர் ஒத்திகையே என்று இராணுவப்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# படையினர் நேற்று அதிகாலை முதல் கொழும்பு நகரில் பெரும் தேடுதல்!

## எவரையும் வெளியே வரவேண்டாம் என வானொலி மூலம் அறிவிப்பு

கொழும்பு, ஒக்ரோபர் 26

பொலிஸாரும் கடற்படையினரும் இணைந்து நேற்று அதிகாலை முதல் கொழும்பில் பெரும் தேடுதல் ஒன்றை மேற்கொண்டனர். அதிகாலை 2.30 மணிக்கு ஆரம்பமான தேடுதல் காலை 8.30 மணி வரை நீடித்தது. இத் தேடுதல் காரணமாக நேற்று நண்பகல் வரை கொழும்பு நகரில் வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது.

கொழும்பில் முன்னெப்போதும் இடம் பெற்றிராதவாறு மக்களை வீடுகளுக்குள் இருக்குமாறு அறிவித்துவிட்டு நடத்தப்பட்ட இத்தேடுதல் காரணமாக தமிழர் அதிகமாக வாழும் பகுதிகளில் பதற்றம் நிலவியது.

மக்களை வீடுகளிலேயே தங்கி இருக்குமாறு வானொலி மூலம் அறிவிக்கப்பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## தப்பிச் சென்ற படையினர் திரும்பிவர மேலும் அவகாசம்

### காலக்கெடு மீண்டும் நீடிக்கப்பட்டது

இராணுவத்தை விட்டுச் சென்றோர் மீண்டும் சேவைக்குத் திரும்புவதற்கான பொது மன்னிப்புக் காலம் எதிர்வரும் 31 ஆம் திகதி நள்ளிரவு வரை நீடிக்கப்பட்டுள்ளது. இந்த மன்னிப்புக் காலம் நேற்று முன்தினத்துடன் முடிவடைய இருந்தது.

31 ஆம் திகதிக்கு முன்னர் சேவைக்குத் திரும்பத் தவறும் இராணுவத்தினரைக் கைது செய்ய இராணுவப் பொலிஸாரும், சாதாரண பொலிஸாரும் நடவடிக்கை எடுப்பார்கள் என்றும்—

இவ்வாறு கைதுசெய்யப்படுவோர் இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு கடும் தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்றும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-5)

# 138 பெண்கள் உட்பட 870 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்!

கொழும்பு, ஒக். 26

கொழும்பில் நேற்று இடம்பெற்ற தேடுதலின் போது வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 300 இளைஞர்களும் யுவதிகளும் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

இவர்கள் பொலிஸ் நிலையங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு தடுத்துவைக்கப்பட்டு தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். நேற்று மாலை வரை விசாரணைகள் நடைபெற்றன.

இவர்களில் 138 பெண்கள் உட்பட 870 பேர் நேற்று

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிலாபத்தில் தம்பதியர் கைது!

சிலாபம் நகரைப் படம் பிடித்துக் கொண்டிருந்த ஒரு தம்பதியினர் பொலிஸ் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவினரால நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

விடுதலைப் புலிகளுடன் இந்தத் தம்பதியினருக்குத் தொடர்பு இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

## தடுத்துவைக்கப்பட்டுள்ளோர் துன்புறுத்தப்படமாட்டார்கள்

### அமைச்சர் அனுருத்த நேற்று அறிக்கை

கொழும்பு, ஒக். 26

நேற்று கொழும்பில் இடம்பெற்ற சுற்றிவளைப்புக் காரணமாக தடுத்துவைக்கப்பட்டுள்ளோருக்கு அசௌகரியங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காகவும் அவர்கள் துன்பு

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் பிரிட்டனையும் கேட்பார்

லண்டன், ஒக். 26

விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்யும்படி பிரிட்டிஷ் அரசை தாம் மீண்டும் கேட்கப்போவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று எடின்பரோ நகரில் வைத்து பி. பி. ஸிக்கு

## நேற்று நண்பகல் வரை கொழும்பு ஸ்தம்பிதம்

கொழும்பு, ஒக். 26

கொழும்பில் நேற்று கடற்படையினராலும் பொலிஸாராலும் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கை காலை முடிவடைந்த போதிலும் நேற்று நண்பகல் வரை போக்குவரத்து, வியாபாரம், அரச, தனியார் அலுவல்கள் உட்பட சகல அலுவல்களும் பாதிக்கப்பட்டன.

தேடுதல் முடிவடையும் வரை கொழும்பில் இருந்து வாகனங்கள் எதுவும் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## தீபாவளித் திருநாளை முன்னிட்டு விஷேச மலிவு விற்பனை

பின்வரும் பொருள்களை உங்களுக்கு
விஷேச கழிவுடன் வழங்குகின்றோம்.

★ சீத்தை 60/-
★ பொலியஸ்டர் பிரின்ற் 50/-
★ சாறிவகை 300/-, 390/-, 500/-, 590/-,
★ கராகூட்டிங் 275/-
★ பிளேன் விஸ்கோஸ் 44'' - 60/-

சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!

**த.குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்**
352, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(50784)



## யா/ஏழாலை மகா வித்தியாலயம் பரிசளிப்பு விழா - 1997

காலம்:- 27 — 10 — 97 திங்கட்கிழமை
பிற்பகல் 1.00 மணி
தலைவர்:- சி. செல்லையா (அதிபர்)
ஆசியுரை:- பிரம்மஸ்ரீ வரதராஜ சர்மா
(பிரதம குருக்கள்)
பிரதம விருந்தினர்:- திரு. அ. தற்பரானந்தன்
(பிரதிக் கல்விப்பணிப்பாளர் - உடுவில்)
சிறப்பு விருந்தினர்:- திரு. ஆ. மகாலிங்கம்
(பிரதேச செயலர் – உடுவில்)
கௌரவ விருந்தினர்:- திரு. சி சக்திகிரீபன்
திரு. இ சுப்பிரமணியம்
(கி. சே.)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,
பா.அ. சங்கம், பழைய மாணவர்கள்,
நலன் விரும்பிகள்.**
(சி/1884)


## கண்ணீர் அஞ்சலி

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில்
கல்வி பயிலும்
செல்வி ரஜினி அவர்களின் தந்தையார்

### பொன்னையா புண்ணியமூர்த்தி

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், விரிவுரையாளர்கள்,
ஆசிரிய மாணவர்கள்,
**பலாலி ஆசிரியர் கலாசாலை.**
(50781)

## வீட்டுத் தோட்ட கருத்தரங்கு

அனலைதீவு விவசாயிகளுக்கான விவசாய வீட்டுத் தோட்டக் கருத்தரங்கு நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு அனலைதீவு சதாசிவம் மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

ஊர்காவற்றுறைப் பகுதிக்கான விவசாய போதனாசிரியர் மற்றும் விவசாயத் திணைக்களத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் கருத்தரங்கில் உரையாற்றுவார்கள். விவசாயிகளின்பிரச்சினைகள். குறித்தும் ஆராயப்படும்.

## விரைவில் லைசென்ஸ்

யாழ்ப்பாணம், ஒக். 26

நவாலி விவசாய சம்மேளனத்தினால் கட்டாக்காலி கால் நடைகளைப் பிடிப்பதற்காக அண்மையில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்களுக்கு விரைவில் அதற்கான உரிமம் வழங்கப்படும் என்று பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன் தெரிவித்துள்ளார்

மேற்படி கட்டாக்காலி பிடிகாரருக்கு விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரச ஊழியர் நன்மை கருதி பஸ் புறப்படும் நேரம் மாற்றம்

வடமராட்சி, ஒக். 26

யாழ்ப்பாணத்திலிருந்து வல்வெட்டித்துறை ஊடாக பருத்தித்துறைக்குச் செல்லும் கடைசி பஸ் சேவையின் நேரம் அரச ஊழியர்களின் கோரிக்கையின் பேரில் மாலை நேரம் வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இப்பாதைக்கான கடைசி பஸ் கடந்த புதன்கிழமை முதல் பிற்பகல் 4.45 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படுகிறது.

முன்னர் இப்பாதைக்கான கடைசி பஸ் பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு வந்தது. (ஐ-173).

## எரிகாயம் காரணமாக மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 26

எரிகாயங்களுடன் ஆபத்தான நிலையில் மூன்று நாள்களுக்கு முன் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட ஒருவர் நேற்று அங்கு மரணமானார்.

வல்வெட்டித்துறை ஆதி கோவிலடிப் பகுதியைச் சேர்ந்த தர்மராசா பிரபாகரன் (வயது 27) என்பவரே உயிரிழந்தவராவார்.

சடலம் மரணவிசாரணையின் பின் மனைவியிடம் கையளிக்கப்பட்டது. (இ-15)

## வெள்ளை அரிசி தட்டுப்பாடு

தென்மராட்சிப் பிரதேச கூட்டுறவு மற்றும் தனியார் கடைகளில் வெள்ளை நாடு, வெள்ளைப் பச்சை, அம்மாப் பச்சை ஆகியவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.


**A/L 99**
**PURE / APP.**
★ காவிகள்
★ நேர் கோட்டியக்கம்
ஆரம்பம்: 27-10-97
4-00 P. m
**98 மீட்டல்**
**Mr. சிவலோகநாதன்**
(B. Sc.)
**SHAMROCK**
(50762)



**BOSCO INSTITUTE**
25. றக்கா வீதி.
**A/L 98**
**PAPER CLASS**
★ மனித உயிரியல்
திரு. யதுநந்தனன்
★ புலங்கள்
திரு ஸ்பெல்மன்
ஆரம்பம்: 27. 10. 97
6. 30 - a. m
(50716)


# மரண அறிவித்தல்கள்

## பொன்னையா புண்ணியமூர்த்தி

(ஓய்வு பெற்ற கிராம சேவையாளர், கரம்பன்)

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த அருணாசலம் பொன்னையா புண்ணியமூர்த்தி (ஓய்வு பெற்ற கிராமசேவையாளர், கரம்பன்) 1997-10-24 (வெள்ளிக்கிழமை) 2 மணியளவில் நயினாதீவில் காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான பொன்னையா, பொன்னாச்சி ஆகியோரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், சின்னாச்சிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும், அன்னலெட்சுமி (ஓய்வு பெற்ற ஆசிரியை)யின் அன்புக் கணவரும், ரதினியின் (ஆசிரியை, பலாலி ஆசிரிய கலாசாலை) பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (தபால் அதிபர்), ராஜேஸ்வரி (கனடா) ஆகியோரது சகோதரரும், காலஞ்சென்றவர்களான மங்கையர்க்கரசி, கந்தையா, சிவகாமிப்பிள்ளை, லாடாதேவி, சதானந்தன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

இறுதிக்கிரியைகள் 25-10-1997 (சனிக்கிழமை) 4.00 மணியளவில் நயினாதீவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பு. ரதினி (மகள்)
(ஆசிரியை, பலாலி ஆசிரியர் கலாசாலை,
திருநெல்வேலி.)

(50761)

## நீக்கிலாம்பிள்ளை சவரிமுத்து இரத்தினராசா

உசன் மிருசுவிலைச் சேர்ந்த நீக்கிலாம்பிள்ளை சவரிமுத்து இரத்தினராசா என்பவர் 24-10-1997 அன்று காலமானார்.

அன்னார் மரியம்மா (நேசம்) வின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற றோச்பிலமேந்திரா (யோகம்), ஜெராட் மாசில்லாமணி (செல்வம் — வன்னேரிக்குளம்) அன்ரன்கிறைசிஸ் (லிகிதர், பிரதேச சபை, கரவெட்டி) யோசப் நீக்லஸ் (மதுரம் — பிரான்ஸ்) காலஞ்சென்ற திருமதி மேரி சறோஜினி கமலாகரன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 26-10-97 இன்று காலை (ஞாயிறு) 9 மணியளவில் மிருசுவில் சேமக்காலையில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. அன்ரன்கிறைசிஸ்
(மகன்)

உசன், மிருசுவில்.

(50777)

## திருமதி தயாளம் பரமபதி

(முன்னாள் ஆசிரியை, நல்லூர் தெற்கு,
விக்னேஸ்வர வித்தியாலயம்.)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தயாளம் பரமபதி அவர்கள் 20-10-97 அன்று லண்டனில் கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

இவர் காலஞ்சென்ற தம்பித்துரை பரமபதியின் அன்பு மனைவியும், அருந்ததி (ஆஸ்திரேலியா) அஜித் (புறூணை), அஜந்தன் (லண்டன்), சுசித்திரா (லண்டன் ஆகியோரின் அன்புத் தாயாரும், கலாநிதி ஞானராஜன், அனுஷியா, டக்ஷனி, சுகுனன் ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் லண்டனில் நடைபெற்றன. அன்னாரின் நினைவு அஞ்சலி ஆராதனைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு (புதிய நேரம்) சுண்டிக்குளி பரியோவான் ஆலயத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி G. இராசகாந்தன்
இல: 4, பழைய பூங்கா வீதி,
சுண்டிக்குளி.
(50782)


## தீபாவளி விசேட மலிவு விற்பனை!

**சீமாட்டி** (புடைவைக் கடல்)

தீபாவளித் திருநாளை முன்னிட்டு பிரத்தியேகமாக இறக்குமதி செய்யப்பட்ட சீமாட்டி புடைவைக்கடலின் அனைத்துப் புடைவைகளும் என்றும் எங்கும் கிடைக்காத விசேட மலிவு விலையில் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன!

சீத்தை 61 00 பப்ளின் 57.50

1. புத்தம் புதிய டிசைன்களில் சாறி வகைகள்
ரூபா 300 இலிருந்து 70( வரை
காதல் தேசம், மின்சாரக் கனவு, வன்ஸ்மோர், இருவர், ராஜ்குமாரி, கீத்மாலா, றசியன் பியூட்டி, சில்க்பியூட்டி, தேவத்தாய், றோமன் லேடி, பவுடர் ரச், லண்டன் பாஷன், சன்சில்க், பட்டர்பிளை சாறி வகைகள் இன்னும் பலப்பல சாறித்தினுசுகள்!
2. ஒறிஜினல் கிப்ஸ் சாரங்கள், பெனியன்கள், லேஞ்சிகள்!
3. பாபறா, ஜோஜோ, இன்ரகூலர், பட்டர்சில்க், செக்துணிவகைகள்
4. சேட்டிங், சூட்டிங் வகைகள்
5 றெடிமேட் அயிட்டங்கள்

**இன்னும் பலப்பல தினுசுகள்!**

இன்றே நாடுங்கள்;

**சீமாட்டி**
புடைவைக்கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(சி-1858)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாநகர மண்டபத்தில் படையினர்; விழாக்கள் நடத்த இடவசதி இல்லை

## மட்டக்களப்பு முதல்வர் கவலை

பட்டிருப்பு, ஒக். 26

பெரிய அளவிலான இலக்கிய, கலை, கலாசார விழாக்களை எடுப்பதற்கான மண்டப வசதியில்லாமல் பெரிதும் பின்தள்ளப்பட்டுள்ளோம். பாதுகாப்புப் படையினர் மாநகரசபையின் பொது மண்டபத்தை தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருப்பது தான் இதற்கான காரணமாகும். என் அதிகார காலப்பகுதியில் இத்துர்ப்பாக்கியமான நிலைவரத்துக்குள் தள்ளப்பட்டுள்ளமை கலை, இலக்கிய வாஞ்சையும், தாகமும் உள்ள எனக்கும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்புமாநகரமுதல்வர் செழியன். ஜே.பேரின்பநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின்வாணிவிழா மாநகர சபை மண்டபத்தில் மாநகர நிர்வாக அதிகாரி பொ. கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. அதில் மாநகர முதல்வர் செழியன் ஜே. பேரின்பநாயகம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றினார். அவர் தமது உரையில் கூறியதாவது:-

தமிழ் மக்கள் உலகில் எங்கெல்லாம் வதிகின்றார்களோ அங்கெல்லாம் தேமதுரத் தமிழோசை பரவும் வகை செய்து வருகிறார்கள்.

நம் கலை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அழியாது பார்த்துக் கொள்ளுவது எமது கடமையாகும். எமக்கான கலை, கலாசார இலக்கியக் கோலங்களை வாழவைப்பதனால் நாம் வாழுவோம். சமய இலக்கியங்கள் விழாக்கள் நம்மை விட்டகலாது இருக்கட்டும்.

போர்ச்சூழலினால் வடக்கு கிழக்குப் பிராந்தியத்தில் சிதறுண்டு போயுள்ளோம். நிம்மதியான வாழ்வைக் காணத் துடிக்கிறோம். அன்றாட அனர்த்த விளைவுகள் செல்வத்தைச் சேர்க்க வழி சமைப்பதாக இல்லை.

எமது சிந்தையெல்லாம் சமாதான வாழ்வினை ஏங்கி வேண்டி நிற்கிறது. சமரசம் மிகுந்த சகஜவாழ்வு மிக மிகத் தேவை. சமய உணர்வுகளைச் சிந்திடும் இது போன்ற விழாக்களில் மன வைராக்கியத்துடன் சமாதானத்தை கற்பிக்க ஆண்டவனை வேண்டுவோம்.

கதைமாமணி மாஸ்டர் சிவலிங்கம், கவிஞர் திமிலைத் துமிலன் ஆகியோரும் உரையாற்றினர். நடன இசை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஐ-129)

# நோயாளர்கள் அதிகரிப்பு மேலும்ஒருமலேரியா பரிசோதகர்

காய்ச்சலால் பீடிக்கப்பட்டு சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவோர் தொகை அதிகரித்து வருவதை அடுத்து மலேரியாத் தடுப்புப் பிரிவுக்கு மேலும் ஒரு மலேரியா பரிசோதனையாளர் தற்காலிகமாக கடந்த பதினைந்தாம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த ஆஸ்பத்திரிமலேரியா தடுப்புப் பிரிவுக்கு கைதடி, வரணி ஆகிய ஆஸ்பத்திரிகளிலிருந்து மலேரியா இரத்த பரிசோதனை கண்ணாடிகள் அனுப்பப்படுவதால் பரிசோதனை அறிக்கைகள் அனுப்புவதில் ஏற்படும் தாமதத்தினைத் தவிர்க்கும் முகமாக பளை ஆஸ்பத்திரியில் கடமையாற்றிய நுண்ணியலாளர் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் கடமையாற்ற நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-117)

### சாவகச்சேரி ஆஸ்பத்திரி

# மார்பு நோய்ச் சிகிச்சைப் பிரிவு ஊழியருக்கு சம்பளம்இல்லை

தென்மராட்சி, ஒக். 26

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் இயங்கும் மார்புநோய் சிகிச்சைப் பிரிவில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு செப்ரெம்பர் மாதத்திற்குரிய சம்பளம் இதுவரை வழங்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்பட்டது.

இம் மாதத்திற்குரிய சம்பளத் தொகை கொழும்பிலிருந்து காசோலையாக ஆஸ்பத்திரிக்கு கடந்த பத்து தினங்களுக்கு முன்னர் வந்து சேர்ந்துள்ளபோதிலும் மார்பு நோய் சிகிச்சைப்பிரிவு பொறுப்பதிகாரி கொழும்பு சென்றுவிட்டதால் காசோலையை வங்கியில் மாற்றிக் கொடுப்பதற்கு சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் முன்வராததால் சம்பளத்தினைப் பெறமுடியாத நிலையில் உள்ளதாக ஊழியர்கள் கவலையுடன் தெரிவித்தனர்.

யாழ். சுகாதார திணைக்கள ஊழியர்களின் ஒக்ரோபர் மாதச்சம்பளம் கடந்த வியாழனன்று வழங்கப்பட்டுள்ளது.

(ஐ-117)

# தர்மலிங்கம்கொலையை அடுத்து கைதான இருவரும் விடுதலை

யாழ்ப்பாணம், ஒக். 26

கடந்த4ஆம்திகதி கொழும்புத்துறையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிப் பிரமுகர் தர்மலிங்கம் சுடப்பட்ட சம்பவத்தையடுத்து பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருந்த பாசையூர் கடற்றொழிலாளர் சங்க உறுப்பினர்கள் இருவரும் கடந்த வெள்ளியன்று விடுதலையாகினர்.

பாஷையூர் அந்தோனியார் கோவில் வீதியைச் சேர்ந்தவர்களான யோவான் சில்வராஜா (வயது 37), அந்தோனிப்பிள்ளை யோகராஜா (வயது 38) ஆகிய இருவருமே விடுவிக்கப்பட்டவர்கள்.

இவர்கள் அப்பாவிகள் என்பதால் இவர்களை விடுதலை செய்யுமாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா பொலீஸாரை கேட்டிருந்தார்.

இவர்கள் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர். (இ-3)

# ஆயிரத்து 365 ஆசிரியர்கள் யாழ். அனுப்பிவைக்கப்படுவர்

## அமைச்சர் பத்திரன தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 26

யாழ்ப்பாணத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் அங்கு ஆயிரத்து 365 ஆசிரியர்கள் அனுப்பி வைக்கப்படுவர்.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் கல்வி தேசிய அதிகாரசபை ஒன்றை உருவாக்குவதற்கான சட்டமூலத்தை கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் மேலும் ஐந்து ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் நிறுவப்படவுள்ளதாகவும்—

அவற்றில் ஒன்று யாழ்ப்பாணத்தில் அமையும்என்றும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

அடுத்தாண்டு டிசம்பருக்குள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை முழுமையாக நீக்கப்படும். அந்தப்பகுதியிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கு உரிய வசதிகள் வழங்கப்படாவிட்டால் அவர்கள் விடுதலைப் புலிகளிடம் செல்லும் வாய்ப்பே அதிகமாகும். அதனால் நாட்டின் முக்கியமான பிரச்சினைக்கும் தீர்வுகாணமுடியாதுபோகும்.

இப்படி அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

(ஐ-5)

# கூ. சங்க கிளையை திறக்க கோரிக்கை

சண்டிலிப்பாய், ஒக். 26

நீண்டகாலமாக மூடப்பட்டுள்ள மானிப்பாய் பலநோக்குகூட்டுறவுச்சங்கத்தின் மூன்றாம் இலக்கக் கிளையான கூளாவடிக் கிளையை அப் பகுதி மக்களின் நலன் கருதி மீண்டும் திறக்குமாறு சங்க நிர்வாகத்திடம் கிளைக் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

அதற்கிணங்க இந்தக் கிளையை விரைவில் திறப்பதற்கான நடவடிக்கையை சங்கநிர்வாகம் மேற்கொண்டு வருவதாக சங்கத் தலைவர் செ. செல்வராஜா தெரிவித்தார்.

(ஐ-135)

# மாணவரின் வசதியீனம் குறித்து மகஜர்

அச்சுவேலி, ஒக். 26

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரியில் கல்வி கற்கும் இந்து சமய மாணவர்களின் வசதியீனங்கள் தொடர்பாக அம் மாணவர்களது பெற்றோர்களின் தூதுக்குழுகல்விஅதிகாரிகளை நேரில் சந்தித்து முறையீடு செய்தது.

கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி ஏ. இராசேந்திரன் வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ். சிவராசா ஆகியோரைச் சந்தித்து உரையாடிய பெற்றோர்கள் தூதுக்குழு இந்து சமய மாணவர்களின் வசதியீனங்கள் தொடர்பான மகஜரையும் கையளித்துள்ளது.

(ஐ-11)

# நிவாரணப் பொருள்கள் விநியோகம்

தென்மராட்சி, ஒக்.26

தென்மராட்சிப் பகுதியில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மற்றும் வன்னியிலிருந்து திரும்பி மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கான 48ஏ, 48பி ஆகிய புள்ளிகளுக்கான உலர் உணவுப் பொருள்கள் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் கடந்த வெள்ளி முதல் வழங்கப்பட்டு வருகிறது. எதிர் வரும் வியாழக்கிழமை வரை அது வழங்கப்படுமென பிரதேச செயலக புனர் வாழ்வுப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

(ஐ-117)

# போக்குவரத்து நெருக்கடியினால் ஒன்றுசேர முடியாத குடும்பங்கள்

## வெளிநாட்டிலிருந்து வந்து திரும்பிச்செல்லும் அவலநிலை

கடந்த ஜூன் மாதம் திருகோணமலை - யாழ்ப்பாணத்துக்கான கப்பல் சேவை முற்றாகத் தடைப்பட்டது. இதனால், வடக்குக்கும் தெற்குக்குமான போக்குவரத்துச் சேவை பாதிக்கப்பட்டது.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் வெளிநாட்டில் இருந்து கொழும்பு வந்த தனது கணவன் இதனால் யாழ்-வந்து தன்னையும், தனது பிள்ளைகளையும் சந்திக்க முடியாமற் போன சோகத்தில் ஒரு குடும்பப்பெண் அனுப்பியிருந்த கடிதத்தின் தொகுப்பு இது.

''நீங்கள் மூன்று வருடங்களுக்குப்பின்னர் வந்திருக்கின்றீர்கள் எங்களைப் பார்க்காமல் செல்வதா? வேலையும் வேண்டாம்; கொம்பனியில் உள்ள காசும் வேண்டாம், நாங்கள் சம்பலும் சோறும் சாப்பிட்டாலும் பரவாயில்லை. விமானத்துக்காவது பதிந்துவிட்டு வாங்கோ'' என்று குவைத்திலிருந்து கொழும்பில் வந்து நிற்கின்ற எனது கணவரிடம் தொலைபேசியில் அழுது அழுது கூறி விட்டேன்.

எனது கணவர் கடந்த ஜூன் மாதம் 29 ஆம் திகதி குவைத்தில் இருந்து புறப்பட்டு அடுத்த நாள 30 ஆம் திகதி கொழும்பு வந்து சேர்ந்தார். இரண்டு மாத லீவுடனும் திரும்பி பயணம் செய்யும் விமான டிக்கெட்டுடனும்தான் வந்திருந்தார்.

வியானத்தில்பதிந்து யாழ். வருவதற்குத் தாமதமாகும் எனபதால் கப்பலில் வரலாம் என்று உடனே திருமலைக்கு வந்து விட்டார்; கப்பலுக்கும் பதிந்துவிட்டார்.

ஜூலை 3 ஆம் திகதியுடன் கப்பல் சேவையும் நிறுத்தப்பட்டுவிட்டது. இன்று ஓடும்; நாளை ஓடும் என்ற அறிவித்தல்களை நம்பி 3 வாரங்கள் கடந்து போன நிலையில், தான் தங்கியிருக்கின்ற விடுதியின் முகவரியையும், தொலைபேசி இலக்கத்தையும் அனுப்பிவைத்தார்.

தொலைபேசி மூலம் எனது கணவருடன் தொடர்பு கொள்வதற்காக யாழ். தபாலகத்திற்கு காலை 7-00 மணிக்கே சென்று தொலைபேசி இலக்கத்தைப் பதிவு செய்து கொண்டேன். பிற்பகல் 3-00 மணிவரை காத்திருந்தேன்.

எனது பரிதாபநிலையைப் பார்த்து அங்கு கடமையிலிருந்த உபதபாலதிபர் திரும்ப 'எக்ஸ்சேஞ்'சிற்கு (தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்திற்கு) தொலைபேசியில் இப்படிக் கூறினார்.

''காலையில் 2 ஆவதாக ''புக்'' பண்ணின தொலைபேசி அழைப்பு இதுவரை கிடைக்கவில்லை. அந்தப்

### அவல அனுபவம் பேசுகிறது

பிள்ளை எவ்வளவோ எதிர்பார்ப்புகளுடன் தனது கணவருடன் கதைப்பதற்கு வந்திருக்கின்றார். காலையில் இருந்து 3-00 மணிவரை சாப்பிடாமல் காத்திருக்கின்றார். பார்க்க எனக்கே பரிதாபமாக உள்ளது. தயவு செய்து மீண்டும் ஒரு முறை முயற்சி செய்து சொல்லவும்'' — என்றார்.

பிற்பகல் 3-30 மணிக்கு எனது கணவருடன் தொலைபேசியில் உரையாடும் வாய்ப்புக் கிடைத்தது. தனக்கு லீவு முடிவதாகவும், தான் திரும்பக் குவைத்துக்குப் போகப் போவதாகவும் கூறினார்.

தன்னுடைய பணம் கொம்பனியில் இருப்பதாகவும் திரும்பிப் போகாவிட்டால் எல்லாம் இல்லாமற் போகும் என்றும் மிகவும் வேதனையுடன் அவர் சொன்னார்.

''நீங்கள் 3 வருடத்துக்குப் பின்னர் வந்திருக்கின்றீர்கள், எங்களைப் பார்க்காமல் செல்வதா? விமானத்துக்காவது பதிந்து விட்டு வாங்கோ' என்று இங்கிருந்து அழுதழுது தொலைபேசியில் கூறி முடித்தேன்.

நாம் வசதிபடைத்தவர்கள் அல்லர். சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எமது சொந்த இடம் காங்கேசன்துறை. அடிக்கடி ஏற்பட்ட இடம்பெயர்வால் இளவாலை, மானிப்பாய், கோண்டாவில், கச்சாய், கண்டாவளை (வன்னி) என்று இப்போது திரும்ப யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளோம். இப்போது ஒன்றுமே இல்லாமல் மிகுந்த கஷ்டப்படுகின்றோம்.

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவித்தல்

வட பிராந்திய
**சிகை அலங்கரிப்பாளர் சங்கம்**
20, நவீனசந்தை, மேல்மாடி யாழ்ப்பாணம்.

தீபாவளியை முன்னிட்டு சிகை அலங்கரிப்பு நிலையங்கள் எதிர்வரும் **29-10-97** புதன்கிழமை திறக்கப்பட்டு மறுநாள் **30-10-97** தீபாவளி அன்று அனைத்து சிகையலங்கரிப்பு நிலையங்களும் மூடப்பட வேண்டும் என்பதை அங்கத்தவர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**க. சிறீகரன்**
செயலாளர்:
வடபிராந்திய சிகை அலங்கரிப்பாளர் சங்கம்.

''குடிமைத் தொழில் முறையை அகற்றுவோம்!''
(50771)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**திருமதி செல்வா கிருபைமணி தம்பிநாயகம்**

(ஓய்வு பெற்ற விஞ்ஞான ஆசிரியர், நவாலி மகா வித்தியாலயம், உயரப்புலம் குணபாலன் வித்தியாலயம்)

பிறப்பு: **05-07-1936** இறப்பு: **26-09-1997**

''உயிர்ப்பும், உயிரும் நானே;
என்னில் விசுவாசம் கொள்பவன்
இறப்பினும் வாழ்வான்''

—குடும்பத்தினர்.

'அன்னா வாசா',
நவாலி தெற்கு,
மானிப்பாய்.
(50754)

---

# 31 ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்



**அமரர் அரியகுட்டி நாகரத்தினம் (குகன்)**

(உரிமையாளர், குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)

தோற்றம்: **15-01-1917** மறைவு: **26-09-1997**

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்தி வேண்டி செல்வசந்நிதி முருகன் ஆலயத்தில் விசேட பூசையும், சந்நிதியான் ஆச்சிரமத்தில் அன்னதானமும்
26 - 10 - 1997 -- இன்று ஞாயிற்றுக்கிழமை
மு.ப. 11.00 மணிக்கு இடம்பெறும்.
உறவினர்கள், நண்பர்களை கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகன் நா. குகனும் (கிளி)
குடும்பத்தினரும்.

**குகன் ஸ்ருடியோ,**
பருத்தித்துறை.

அன்னாரின் மறைவையொட்டி நேரிலும், தந்தி கடிதமூலமும், பத்திரிகைகள் மூலமாகவும் அஞ்சலி செலுத்தியோர்க்கும், சகல வழிகளிலும் உதவியோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
(சி-[illegible])

---

## ஆங்கிலம் தபால் மூலம்

தொழில் புரிவோர், தேடுவோர், மாணவர் அனைவருக்கும் விரைவாகவும், விளக்கமாகவும் பயிற்றப்படுகிறது. முத்திரை, சுய விலாசமிட்ட உறையுடன் எழுதவும்.

**LAMPS LTD.**
76, Mahaveethiya
(grand street)
Negombo.
(50542)

---

## வைத்தியம்

செங்கண்மாரி, அல்சர், ஆஸ்துமா, வாதநோய்கள், வலிப்பு நோய், பீனிசம், தலையிடி, தலைகால் அவியல், சருமநோய்கள், மாதவிடாய்க்குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, குழந்தை வைத்தியம், வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர், சகல வியாதிகளையும் குணப்படுத்துபவர்:

வேலணை
வைத்திய கலாநிதி
**சி.இராசரத்தினம்**
121, 2ஆம்குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(50297)

---

## தேவை

**கணக்குப் பதிவாளர் (Book Keeper)**

யாழ். நகரில் அமைந்துள்ள பிரபல வர்த்தக நிறுவனத்திற்கு ஐந்து வருட முன் அனுபவமுள்ள கணக்குப் பதிவாளர் தேவை. ஆங்கிலம் சரளமாக எழுதப், பேசத் தெரிந்திருப்பதுடன் ஆங்கில தட்டச்சும் (English typing) தெரிந்திருந்தால் தெரிவிக்கவும்.

வயது எல்லை 35 — 50
விண்ணப்ப முடிவு:
**10 - 11 - 97**
மே/பா இல. 659
**உதயன்**
யாழ்ப்பாணம்.
(50767)

---

# பெரியகடை, சிறாம்பியடி பிரிவில் 108 குடும்பங்களுக்கு ரூ.5,000

ஜே-80 பெரிய கடை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 55குடும்பங்களுக்கும், ஜே-79 சிறாம்பியடி கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 53 குடும்பங்களுக்கும் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவான 5 ஆயிரம் ரூபா வழங்கப்படவிருப்பதாக கிராம அலுவலர் அறிவித்துள்ளார்.

கொடுப்பனவு பெறும் குடும்பங்களின் விவரப்பட்டியல் ஜே-80 கிராம அலுவலர் பணிமனையில் வைக்கப்பட்டு உள்ளது.

சம்பந்தப்பட்டோர் தமது குடும்ப அட்டையுடனும் ரூபா 5 பெறுமதியான முத்திரையுடனும் நாளை திங்கட்கிழமை காலை வருகை தந்து கொடுப்பனவு பெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# நவாலி விவசாயிகளுக்கு யூரியா வழங்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக். 26

நவாலி விவசாய சம்மேளனத்துக்குட்பட்ட விவசாயிகளுக்கு உடுவில்கமநல கேந்திர நிலையத்தால் யூரியா உரம் வழங்கப்படவுள்ளது.

பெரும்போக நெல் விதைப்பில் ஈடுபட்டு பயிராக்கியுள்ளவர்களுக்கே யூரியா வழங்கப்படும். இவ்வாறானவர்கள் தமது பெயர் விவரம், பயிரிட்ட நிலத்தின் பரப்பளவு, அடையாள அட்டை இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்கு முன் நவாலி விவசாயிகள் சம்மேளனத்தின் செயலாளருக்கு விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டு உள்ளது. (ஐ-15)

# வடமராட்சியில் சாயி சேவா நிலையங்களின் கண்காட்சி

வட பிராந்திய சத்திய சாயி சேவா நிலையங்கள் இணைந்து நடத்தும் '' சத்தியம் – தர்மம்'' கண்காட்சி அடுத்த மாதம் 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையும் 3 ஆம் திகதி திங்கட்கிழமையும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கண்காட்சியை சத்திய சாயி சேவா நிலையங்களின் மத்திய இணைப்பாளர் ஸ்ரீ. செ. சிவஞானம் பிரசாந்திக் கொடியேற்றி வைக்க யாழ். கல்வி வலயம் இரண்டின் பணிப்பாளர் எஸ். சிவராசா பருத்தித்துறைக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. தி. செல்வரத்தினம் ஆகியோர் ஆரம்பித்து வைப்பர்.

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா 1996 ஆம் ஆண்டை சத்திய ஆண்டாகவும் 1997 ஆம் ஆண்டை தர்ம ஆண்டாகவும் பிரகடனப்படுத்தியிருந்தார். அதனை முன்னிட்டே இக்கண்காட்சி நடத்தப்படவுள்ளது. (ஐ-173)

---

உ

தீபாவளி
## மலிவு விற்பனை

| | |
|---|---|
| சீத்தை | பப்பிளின் |
| இன்ரகூலர் | பட்டசில்க் |
| ஜோ ஜோ | சேட்டிங் வகைகள் |

மற்றும் சகலவிதமான புடைவைகளுக்கும்

**வளர்மதி ரெக்ஸ்ரைல்ஸ்**
**259 (176), கே. கே. எஸ். வீதி,**
**யாழ்ப்பாணம்.**
[50787]

---

**வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி**

# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்வி பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து 04 - 11 - 1997 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். இக்கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் அன்றைய தினமே நண்பகல் 12-00 மணிக்கு திறந்து பரிசீலிக்கப்படும்.

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப் பிரதியை விசேட ஆணையாளர், வலி. கிழக்குப் பிரதேச சபை, நீர்வேலி என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், செட்டித்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் 03 - 11 - 1997 ஆம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் எழுதப்பட்டு இருத்தல் வேண்டும்.

| வேலையின் பெயர் | வைப்புப் பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|
| அலுவலகத் தளபாடங்கள் செய்தல் | 500/- | 100/- |

மேற்படி வைப்புப் பணத்தையும் கேள்விப் படிவக் கட்டணங்களையும் செலுத்துவதன் பேரில் 03-11-1997 ஆம் திகதி பகல் 12-30 மணி வரை எம்மால் வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டாது. இது சம்பந்தமான மேலதிக விவரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**கதிரவேலு கேதீஸ்வரன்,**
விசேட ஆணையாளர்.

வலி. கிழக்கு பிரதேச சபை
[illegible] அலுவலகம், நீர்வேலி.
24 - 10 - 1997
(சி-1878)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் நிலையை உலகுக்கு வெளிப்படுத்த

# ஓங்கிக் குரல் கொடுத்த ஆயர் அம்பலவாணர்.

அண்மையில் மறைந்த பேராயர் கலாநிதி டி. ஜே. அம்பலவாணர் சமயத்தினூடு மக்கட் தொண்டு செய்த பெரும் ஆன்மீக வியலாளர் மட்டுமன்றி தமிழ் மக்களின் உரிமைக்காக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் ஓங்கிக் குரல் கொடுத்த வருமாவார்.

தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்ட இன மக்களாகவே வாழ்ந்து வருகிறார்கள் என்ற உண்மையையும் அவர்களின் சுதந்திரம் நிலை நாட்டப்பட வேண்டும் என்பதனையும் மிகத் துணிச்சலுடன் எடுத்துச் சொன்ன கர்ம வீரர் அவர்.

அவர் தமது மரணம் வரை தமிழர் உரிமைகளுக்காக ஓங்கி ஒலித்துக் கொண்டே இருந்தார். அந்தப் பணியில் இருந்து அவர் ஓய்ந்ததில்லை என்பதனை அவருடன் நெருங்கிப் பழகியவர்கள் அறிவார்கள். சுதந்திரம் உயிரனையது என்பது அவரது அசைக்க முடியாத கொள்கையாக இருந்தது. அதனைச் சொல்வதிலும், அதற்காக உழைப்பதிலும் தம்மைப் பெருமளவில் அர்ப்பணித்த பெருந்தகை அவர்.

தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை, அவர்களிடமிருந்து பிரிக்க முடியாத உரிமைகளை அரசு பறித்து வருவது குறித்து வெளிநாடுகளில் பல அரங்குகளிலும் வைத்துத் துணிச்சலுடன் எடுத்துக் சொன்னவர் அவர்.

பேராயர் அம்பலவாணர் ஆண்டகையும், யாழ். கத்தோலிக்க மறை மாவட்டத்தின் முன்னாள் ஆயர் அதி. வந். தியோகுப்பிள்ளை ஆண்டகையும் காரிருள் சூழ்ந்த ஒரு காலகட்டத்தில், அரசியல் தலைமைத்துவம் இல்லாது தவித்து நின்ற யாழ். குடாநாட்டு மக்களுக்கு தஞ்சம் தந்து அவர்களுக்காக அவர்களது பேச்சாளர்களாக குரல் கொடுத்து வந்தவர்கள் என்பது முக்கிய பதிவாகும்.

ஈழத் தமிழர்கள் உரிமைக்காக குரல் கொடுத்து வந்த இவ் இருவருள் ஒருவராகிய அதி வண. அம்பலவாணர் ஆண்டகையின் மறைவு ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் பெரும் பேரிழப்பாகும். இவர் தமது மந்தையுள் தாமும் ஒருவராக இருந்து தமிழ் மக்களின் சுக துக்கங்களையும், வாழ்வையும், தாழ்வையும் பகிர்ந்து கொண்ட ஒருவராக வாழ்ந்து அவர்களுக்கு வழிகாட்டி வந்தவர்.

யாழ்ப்பாணக் குடாநாடு அரசு படைகளால் முற்றுகையிடப்பட்டு, பெரு நிலப் பகுதிகளுக்கான மக்களின் போக்குவரத்துப் பயணங்கள் ஆகிய யாவும் முடக்கப்பட்ட போது, உயிர் ஆபத்துக்களையும் பொருட்படுத்தாதவர்களாக தமிழ் மக்கள் பயணம் செய்த கிளாலிக் கடலினூடான படகுப் பயணங்களையே தாமும் மேற்கொண்டு வந்தவர் பேராயர்.

அக் கால கட்டத்தில் தாம் மேற் கொண்டிருந்த வெளிநாட்டுப் பயணங்களின் போதும், தலைநகர் கொழும்பை எட்டுவதற்கு கப்பல் பயணங்களையோ விமானப் பயணங்களையோ நாடியது கிடையாது.

அது போன்றே 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையின் போதும், ஐந்து இலட்சம் தமிழ் மக்கள் ஒரே தினத்தில் வலிகாமத்தை வெறுமையாக்கி வெளியேறிய போதும் தாமும் தமது துணைவியாருடன் வரணிக்கு இடம் பெயர்ந்திருந்தார். தமது மக்கள் அனுபவிக்க முடியாத சலுகைகளைத் தமக்காக ஆண்டகையாரிடமும் யாசித்தது கிடையாது. தமிழ் மக்களுடன் தமது மந்தையுடன் பிரிக்க முடியாத ஒருவராக ஒன்றித்து இருந்த மேய்ப்பன் ஆண்டகை அவர்கள்.

தந்தை செல்வாவை இஸ்ரவேல் மக்களின் மீட்பனாகிய இறைதூதர் மோசேஸுடன் ஒப்பீடு செய்திருந்தவர் பேராயர் அம்பலவாணர் அவர்கள். தந்தை செல்வா தென் இந்தியத் திருச்சபையைச் சேர்ந்தவர் என்பதால் தந்தை செல்வா மறுமைக்குள் பிரவேசித்ததும் அவரது இறுதிக் கிரியைக்கான பொறுப்பு ஆண்டகையிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. தந்தை செல்வா அனைத்துத் தமிழ் மக்களாலும் தமது தேசபிதாவாகப் போற்றப்பட்டவர். ஆதலால் தந்தையின் பொன்னுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காக வீரசிங்கம் மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அத்தனை நாள்களும் அனைத்து மதத்தினரும் பங்கு கொண்ட ஒரு பாடல் ஆராதனையாகவே அமையும்படி பார்த்துக் கொண்டார் அம்பலவாணர் ஆண்டகை.

**சா. ஆ. தர்மரத்தினம்**

தந்தை செல்வா நினைவாலயம் அமைந்துள்ள இடத்தில் தந்தை செல்வாவின் பொன்னுடலுக்கு அதி வணக்கத்துக்குரிய அம்பலவாணர் ஆண்டகை தாமே தம் கரத்தால் கொள்ளி வைத்து தகனம் செய்த போதும், பின்னர் தந்தை செல்வா நினைவுத் தூபிக்கு அத்திவாரக்கல் நாட்டப்பட்ட போதும், தந்தை செல்வா நினைவாலயம் வைபவ முறைப்படி திறந்து வைக்கப்பட்ட போதும், தந்தை செல்வா ஜனன, சிரார்த்த தின ஞாபகார்த்த ஆராதனைகளில் பாராட்டுரை, அருளுரை வழங்கி சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் தந்தை செல்வாவின் தலைமையை இஸ்ரவேல் மக்களுக்கு மோசேஸ் காட்டியவழி நடத்தலுடனேயே ஒப்பீடு செய்திருந்தவர் அம்பலவாணர்.

1998 மார்ச் 31 ஆம் திகதி முதல் தந்தை செல்வாவின் ஜனன நூற்றாண்டு விழாவைக் கொண்டாட ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கும் ஈழத் தமிழ் மக்களுக்கு இறையியலாளர் அம்பலவாணர் ஆண்டகையின் பிரிவு பேரதிர்ச்சியையும், துயரத்தையும் தந்திருப்பதில் ஆச்சரியமில்லை.

### தென் இந்தியாவில்

இந்திய அமைதிப் படையினர் இங்கு மேற்கொண்ட இராணுவ அட்டூழியங்களை தென் இந்தியாவில் நடைபெற்ற தமது திருச்சபையின் பேரவையில் வைத்தே விமர்சிக்கத் தலைப்பட்டார் அதி வண. அம்பலவாணர் ஆண்டகை. அதே பேரவையில் சமுகமளித்திருந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆண்டகை பேசிக் கொண்டு இருந்த போது ஒரு துண்டை அவரிடம் அனுப்பியிருந்தனர்.

அதில் குறிப்பிடப்பட்ட செய்தி வருமாறு ' இலங்கைத் தீவில் நடைபெறும் காரியங்களை இங்கு பேசாதீர்கள். உங்களுக்கு இஷ்டமானால் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியுடன் அவை குறித்துப் பேசுங்கள். பிரதமர் ராஜீவை சந்திப்பதற்கு வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறோம்.'' என்பதாகும். ராஜீவை சந்திக்கும்வாய்ப்பை நழுவ விடாவிட்டாலும், தாம் எடுத்துக் கொண்ட பணிக்கும் போடப்பட்ட தடையை மேவத் துணிந்தார் ஆண்டகை.

வட்டுக்கோட்டை ஆசனக் கோவிலில் நிகழவிருந்த வரலாற்று வைபவ நிகழ்வு ஒன்றில் கலந்து கொள்ளும் பொருட்டாக தென் இந்தியத் திருச் சபையின் தலைவர்களை ஒரு குழாமாகவே யாழ்ப்பாணத்துக்கு வருவித்தார். அவர்களுக்காகத் தாம் ஏற்பாடு செய்திருந்த ஒரு பொது வரவேற்பில் வைத்து, யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தின் கௌரவ செயலாளராக அப்போது விளங்கிய அங்கிலிக்கன் திருச்சபையின் தற்போதைய யாழ்ப்பாண ஆர்ச் டீக்கன் வண. பிதா ஜோசப் சர்வானந்தன் அடிகளாரைக் கொண்டும் இந்திய அமைதிப்படைத் தளபதி கல்கத்துக்கும், விடுதலைப் புலிகளின் துணைத் தலைவருக்கும் இடையே நடைபெற்று வந்த கடிதத் தொடர்புகளுக்கு அப்போது நடுவராகச் செயற்பட்டுவந்த யாழ். மாநகர ஆணையாளர் சி. வி. கே சிவஞானம் அவர்களைக் கொண்டும் நாட்டு நடப்பைத் தெளிவு படுத்தியிருந்தார்,

இவ்வாறாக எடுத்த காரியம் எதுவாயினும் அதில் தோல்வி போகாது நிதானமாக நடந்து கொள்ளும் ஆண்டகையின் திறன் வியக்கத் தகுந்தது.

ஆண்டகை ஓய்வு பெறுவதற்கு முன் இங்கிலாந்துக்கு சென்றிருந்தார். அங்கிலிக்கன் திருச்சபையில் இலங்கை விவகாரங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டிருந்த றிப்பன் மறை மாவட்ட ஆயர் 1992 நவம்பர் திங்களில் அங்குள்ள பிரபுக்கள் சபையில் உரை நிகழ்த்தும்போது. இலங்கைத் தமிழர் படும் இன்னல்கள் குறித்து விரிவாக உரை நிகழ்த்தியிருந்தார். றிப்பன் ஆயரின் மேற்படி உரை (Tamilvoice International) என்ற இதழில் வெளிவந்திருந்தது.என நினைக்கிறேன். அதன் பிரதியை ஆண்டகையிடம் காண்பித்தபோது' தாமே றிப்பன் ஆயருக்கு மேற்படி தகவல்களைத் தந்ததாக அடக்கத்துடன் தெரிவித்தார் அம்பலவாணர். தமிழர்களின் உரிமைக்காக துணிச்சலுடன், குரல் கொடுக்க வல்ல மதத் தலைவர்கள் பேராயர் அம்பலவாணர் போன்று இனி ஒருவர் தான் வருவாரா?

# தமிழ் மொழியின் தொன்மையை

# ஆதாரத்துடன் காட்டும் அரியநூல்

தமிழ் மொழியிற் பரந்த புலமையும் பற்றுங்கொண்ட ஆய்வாளர் கதிர் தணிகாசலர்எழுதிய 'தமிழ்மொழியின் மாட்சியும் பரந்த பண்பாடும்' என்ற நூல், தமிழ் மொழியின் தொன்மையையும், அம்மொழிபேசுவோரது பண்பாட்டையும் நயம்பட எடுத்துக் கூறுகின்றது.

தமிழ் மொழியானது உலகுடன் ஒன்றிய மொழி என்பது வெறும் உபசாரம் இல்லை; வரலாறுக்கும் முந்திய வரலாறு என்பதை ஆணித்தரமான ஆதாரங்களுடன் வாழும் தமிழ் பேசும் மக்களை நினைவிற் கொண்டும், இலக்கியத்தமிழ், தெய்வத் தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ், அறிவியற்தமிழ், மருத்துவத்தமிழ், பிற நாடுகளில்தமிழ், வளருந்தமிழ் என்றெல்லாம் வகுத்து தொகுத்துச் செல்கின்றார். மொழியை இவ்வாறு வகுத்து ஆய்ந்திருப்பதே இந்நூலின் தனிச் சிறப்பம்சமாகும்.

சிறப்பாக மருத்துவத் தமிழ் என்னும் பகுதியில் இயற்கை மருத்துவம் மட்டுமன்றி சித்த மருத்துவம், இறை வழிபட்ட

**நூல்: தமிழ் மொழியின் மாட்சியும் பரந்த பண்பாடும்**

**ஆசிரியர்: கதிர். தணிகாசலம்**

நூலாசிரியர் காட்ட முயன்றிருக்கின்றார்.

தமிழ் மொழியை இயல், இசை, நாடகம் என முத்தமிழால்வழங்கிவருகின்ற ஒரு பாரபரியம் கண்டு ஆசிரியரோ அப்பாரம்பரியத்தையும் கடந்து மாறும் சமுதாயத்திற்கு ஏற்ப மொழியின் இயல்பையும் மாற்றியமைக்கலாம் எனக் காட்ட முயன்றிருக்கின்றார்.

அறிவியல், தொழில் நுட்ப மாற்றங்களுக்கேற்பவும், புகலிடம் தேடி பிறநாடுகளில் அகத்தியர், திருமூலர் போன்ற சித்த புருடர்களின் செயல்முறை என்பனவும் கூறப்பட்டுள்ளன.

உலகின் பல்வேறு பகுதிகளில் வழங்கும் மொழிகளுடன் தமிழ் பரந்தளவில் உறவு வைத்திருக்கின்றது என்

**நூல் வரிசை**

பது நூலைப்படிக்கும் போது தெளிவாகின்றது. [illegible] கள் தேவையில்லா[illegible] கங்களையும் குறைந்தளவிலான கருத்துக்களையும் கொண்டிருப்பது இயல்பு. ஆனால் இச்சிறுநூலில் அடங்கியுள்ள கருத்துக்களோ பரந்துபட்டவை.

''உலகின் எந்தப்பகுதியிலும் நாம் வசிக்க முடியும். எந்தக் கடலிலும் கப்பலோட்டமுடியும். எந்த மக்கள் உள்ளத்திலும் மானுடம் கண்டு ஒத்துவாழ முடியும்'' என்ற தமிழர் பண்பாடு, நூலின் பல இடங்களில் பளிச்சிடுகின்றது.

ஒவ்வொரு தமிழ் மகனும் வீட்டில் வைத்திருக்கவேண்டிய அருமையான பொக்கிஷம் இந்நூலாகும்.

கி. நடராசா
(அதிபர், உடுப்பிட்டி அ. மி. கல்லூரி.)

## கலந்துரையாடல்

கொழும்புத்துறை, ஒக். 26

''கந்தசஷ்டி காலத்தில் உலக உயிர் பாதுகாப்பு'' என்னும் தலைப்பிலான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு நல்லை ஆதீனத்தில் யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவைத் [illegible] தலைமையில் நடைபெறும்.

(ஐ-30)

சுகாதாரப் பகுதி ஊழியர்களை

# வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

திருநெல்வேலி, ஒக். 26

நான்கு வருட சேவையை யாழ். மாவட்டத்தில் பூர்த்தி செய்த சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள், அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் நடைமுறைப்படுத்தப் படவுள்ள வருடாந்த இட மாற்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு இவ்வாரம் அனுப்பிவைத்துள்ள அவசர சுற்றறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

பதிவு பெற்ற வைத்திய அதிகாரிகள், உதவி வைத்திய அதிகாரிகள், மருந்தாளர்கள், குடும்ப நல சேவையாளர்கள்,எழுதுவினைஞர்கள் மற்றும்துணைமருத்துவ சேவையைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் ஆகியோர் எதிர்வரும் 31. 12. 97 திகதியன்று தங்கள் 4 வருட சேவையை யாழ்ப்பாண சுகாதார பிராந்தியத்தில் பூர்த்தி செய்திருக்கும் பட்சத்தில் இந்த வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்று அதில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

யாழ். சுகாதார பிராந்தியத்திலுள்ள அரசினர் வைத்திய சாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்கள் ஆகியவற்றுக்கும் இந்த இடமாற்றம் பற்றிய சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

# சுகாதாரப் பகுதி ஊழியருக்கு சீருடைகள் விநியோகிப்பு

தென்மராட்சி, ஒக். 26

சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கான இவ்வருடத்திற்குரிய சீருடைகள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையினால் அந்தந்த சுகாதார திணைக்கள நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள், குடும்பநல சேவையாளர்கள், சாரதிகள், சிற்றூழியர் ஆகியோருக்கான சீருடைத் துணிகளே வந்துள்ளன.

தாதி உத்தியோகத்தர்களுக்கு சீருடைத் துணிக்குப் பதிலாக அதற்குரிய தொகை பணமாக வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

விறாத்துக் குஞ்சுகளும் புறோயிலர் கோழிகளும் தொகையாகவோ சில்லறையாகவோ பெற்றுக் கொள்ள: அண்ணாபாம், இணுவில்.
(50747)

நல்ல நிலையிலுள்ள மொறிஸ் மைனர் EN 9832 (1000 ENGINE) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ச. சடாட்சரநாதன், 49, அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
(50750)

இறைச்சிக் கோழி (புறோயிலர்) மற்றும் கல்பேர்ட் கோழிகள் விற்பனைக்குண்டு. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: 17 (5), கோயில் வீதி, யாழ்ப்பாணம் (கோயில் வீதி, ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில்).
(50763)

## வீணை விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள வீணை விற்பனைக்கு உண்டு. தொடர்பு: சுனில், 23, ஈச்சமோட்டை கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
(சி/1874)

## புறோயிலர் விற்பனை

இறைச்சிக்கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு: NO.141, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (50764)

## தவறிவிட்டது

வேலுப்பிள்ளை விவானந்தநாதரது இல. 593223485V தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை, கார்லைசன்ஸ் என்பன யாழ். பேருந்து நிலையத்திற்கும் நீராவியடி சந்திக்குமிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து வாடகைக் கார் இயக்குநர் சங்கம், யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும்.
(50765)

S. சீனிவாசன் என்பவரது மூக்குக்கண்ணாடி கூட்டுடன் திருநெல்வேலிச் சந்தையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 317. கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும்.
(50772)

## இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. விலை ரூபா 160. இடம்: இல. 153, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (மனோகரா தியேட்டர் அருகில்) மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். (50729)

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தொடர்பு: 54/2, சந்தன மாதா கோயில் முன் ஒழுங்கை, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு, 217/A, ஆஸ்பத்திரி வீதி, (சிறீதரன் மரக்காலை முன்பாக) யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் பெற்றுக் கொள்ளலாம். (50770)

## TRANSLATIONS

German Language English, Tamil Translations, Sabanayagam 'Rudi Cot' 33, Kandy Road, Jaffna.
(50756)

## தென்னம் நாற்றுக்கள்

உடன் நடுகைக்குகந்த, நல்லின தென்னம் நாற்றுக்கள் செவ்விளை, வத்தாவி, மாலைதீவு, சாதாரணம் குறுகிய காலத்தில் பலன் தரக்கூடியவை விற்பனைக்குண்டு. தொடர்பு:- மு. காங்கேசு, ஐயாகடையடி, கண்டிவீதி, மீசாலை. (50590)

## வாடகைக்கு

ஆனைப்பந்தி பருத்தித்துறை வீதியில் சகல வசதிகளும் கொண்ட பெரிய வீடு ஒன்று வாடகைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். சீலன், இல. 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
(50774)

## A/L பௌதிகவியல்

பௌதிகவியல்: தூயகணிதம், பிரயோககணிதம் பாடங்கள் அனுபவம் பெற்ற ஆசிரியரினால் குறுகிய காலத்தில் சிறப்பாகக் கற்பிக்கப்படும். தனிப்பட்ட முறையிலும் கற்பிக்கப்படும். தொடர்பு: R. பாலசுப்பிரமணியம் B.Sc. (Cey.) 171/1 பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(50766)

# முக்கிய அறிவித்தல்

யா/மானிப்பாய் சென். ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலையில் கல்வி பயின்ற பழைய மாணவர்கள் அனைவரையும் 15 — 11 — 97 இற்கு முன்னர் பாடசாலையில் பெயர்களைப் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

அதிபர்,
யா/மானிப்பாய்
சென். ஆன்ஸ் றோ. க. த. க.
பாடசாலை.

(சி/1873)

### பொதுமக்கள் கவனத்திற்கு

# விசேட அடையாள அட்டை

## திருத்தங்கள்

''ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் திரு. கே, ஜே. வி. ரணசிங்க அவர்கள், விசேட அடையாள அட்டைத் திருத்தங்களை இலவசமாகச் செய்து அளிக்கும்படி பணிப்புரை வழங்கியுள்ளார். எனவே வி. அ. அ. திருத்தங்கள் வேண்டுபவர்களும் ஏற்கனவே கடிதங்கள் மூலமாக திருத்தங்கள் செய்யப் பெற்றவர்களும் தத்தமது படப் பிரதிகளுட்னும், 'உறுதிப்படுத்தும் ஆவணங்களுடனும் எமது அலுவலகத்துடன் உடன் தொடர்பு கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.'

(சி–1875)

# கண்ணீர் அஞ்சலி

## நாகமணி இரத்தினவேல் FCMA

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் உதவி நிதியாளராகச் சேவையாற்றிய எமது அன்புக்குப் பாத்திரமான,


## நாகமணி இரத்தினவேல்

அவர்கள் காலமான துயரச்செய்தி அறிந்து அதிர்ச்சி அடைகின்றோம். அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும் அதே வேளை, அவர்தம் குடும்பத்தில் ஒருவராக துயரத்தில் பங்கு கொண்டு எமது கண்ணீர் அஞ்சலிகளைக் காணிக்கையாக்குகின்றோம்.

நிதிப்பிரிவு அங்கத்தவர்கள்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(50744)

# 31ஆம்நாள் கண்ணீர் அஞ்சலி



தோற்றம்: 15 — 01 — 1917

மறைவு: 26 — 09 — 1997

## அமரர் அரியகுட்டி நாகரத்தினம்
## (குகன்)

(உரிமையாளர், குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)

எங்கள் ஆத்மாவின் உந்துசக்தியே
எங்களைத் தொடர்ந்தும் வழிநடத்துங்கள்
உங்கள் பாதம் பணிந்து பூசிக்கின்றோம்.
உங்களை ஆராதிக்கின்றோம்; ஆசீர்வதியுங்கள்.

துயரால் வாடும்:
குகன் ஸ்ருடியோ,
சாவகச்சேரி.

(50755)

# நானூறு குடும்பங்களுக்கு சங்கானையில் கொடுப்பனவு

வட்டுக்கோட்டை, ஒக். 26

வலிகாமம் மேற்கு சங்கானைப் பிரதேச செயலகப் பிரிவில் மீளக் குடியமர்ந்தோருக்கான ஐயாயிரம் ரூபா கொடுப்பனவு மேலும் 400 குடும்பங்களுக்கு வழங்கப்பட உள்ளது.

அராலி கிழக்கு, அராலி வடக்கு, சங்கானை மேற்கு, சங்கானை தெற்கு, வட்டுக்கோட்டை தெற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டோருக்கே கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

(ஐ-12)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## புவனேந்திரம் சசிகபூர்

(நாவலடி அரியாலை, யாழ்ப்பாணம்.)

தோற்றம்: 20 — 11 — 1972

மறைவு: 26 — 10 — 1995

பண்பின் உறைவிடமாய் பாசத்தின் திருவுருவாய்
அன்பு நெறிகாட்டி என்னை அரவணைத்த அப்பாவே!
பாதி வழியில் எம்மைப் பரிதவிக்கவிட்டு
விண்ணுலகம் சென்றனையோ?
வற்றாத கண்ணீருடன் நாம் இங்கு வாடுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:

மனைவி: ஜெயந்தி,
மகள்: கீர்த்திகா,
தாய், தந்தை, சகோதரர்.

தபாற்கட்டை சந்தி,
அரியாலை.

(50625)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



## அமரர் வே. நற்குணராசா

தோற்றம்: 24 - 02 - 1929

மறைவு: 26 - 09 - 1997

திதி: 26 - 10 - 97

பேசரிய எம் தெய்வம் திடீர் மறைவாய்
பிரிந்து சென்றாய்! பூமி மீதில் தேசமெலாம்
அறிந்தவுன் மேல்நாமென்றும் கொண்டிருந்த
அன்பும் போமோ? பாசமது நீங்காத பண்பதனை
யாம் மறவோம் பாரிலுந்தன் வழி தான் செல்வோம்
ஈசனவன் பாதமலர் ஏத்துகின்றோம் அனுதினமும்
உன்னாத்மா சாந்தியது பெறவே!

மனைவி, பிள்ளைகள், மாமி,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

(50753)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## வழமையான குழப்பம்

இனப்பிரச்சினைக்கு அரசு முன் வைத்துள்ள தீர்வு யோசனை, பெரும் அமளி துமளிக்கு மத்தியில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை சபை கூடிய போது, அரசமைப்பு நீதித்துறை அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், தீர்வு யோசனையைச் சமர்ப்பிக்க முனைந்தவேளை —

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக் கட்சி எம். பிக்கள் அதனைச் சமர்ப்பிக்க விடாது குழப்பம் செய்தார்கள்.

நாடாளுமன்றத்தின் எந்த நிலையியற் கட்டளையின் கீழ் தீர்வு யோசனை சமர்ப்பிக்கப்படுகிறது என்று கேள்வியும் வேறு எழுப்பினார்கள்.

ஐக்கியதேசியக்கட்சியின் இந்தப் போக்கு, தீர்வு யோசனையைச் சமர்ப்பிக்கவிடாது தடுக்கும் நோக்கு, அமைச்சர் பீரிஸுக்கு மட்டும் ஆச்சரியத்தைக் கொடுக்கக் கூடியயல்ல. எல்லாருக்குமே ஆச்சரியமானதுதான்!

தெரிவுக் குழுவில் சம்மதம் தெரிவித்துவிட்டு சபையில் சமர்ப்பிக்க விடாது தடுக்க முயன்றமை, அக்கட்சியின் அரசிலே் கனவான் தனத்தை சந்யதகத்துக்கு உரியதாக்கி உள்ளது.

அவ்வாறு அநாகரிகமாக நடந்து கொண்ட பின்னர் —

ஆறு மாதங்கள் அவகாசம் தந்தால் ஐக்கியதேசியக்கட்சியும் இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனை ஒன்றை முன் வைக்கும். அரசாங்கம் அவசரப்பட்டு முடிவுகளை எடுக்கக் கூடாது. அரசமைப்பைக் குறுகிய காலத்தில் தயாரித்து அது ஒரு சில ஆண்டுகளுக்கு மட்டும் நடைமுறையில் இருக்க ஏற்பாடு செய்யக்கூடாது — என்று தத்துவம் பேசியிருக்கின்றார்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர்.

அரசின் தீர்வு யோசனை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதும், அதே வேளை ஐக்கிய தேசியக் கட்சியின் ஒற்றையாட்சிக் கொள்கைக்கு முரணானது என்பதும் வெளிப்படையானவை.

அதற்காக தீர்வு யோசனையை சபையில் சமர்ப்பிக்கும் நடவடிக்கைக்கு முதலில் எதிர்ப்புத் தெரிவிக்காமல், இறுதி நேரத்தில் குழப்ப முயற்சித்தது அதன் அங்கிடுதத்தித் தன்மையையே பிரதிபலிக்கிறது.

பதினேழு வருட ஆட்சியில் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாத ஒருகட்சி, ஆறு மாதங்களில் கண்டு விட இயலும் என்று கூறுவது கண் கட்டி வித்தையாகவே முடியும்.

சர்வகட்சி மாநாடு, வட்ட மேசை மாநாடு, அனைத்துக் கட்சி மாநாடு, மங்களமுனசிங்கா தெரிவுக்குழு என்று காலத்துக்குக் காலம் வேடம் போட்ட ஐக்கிய தேசியக் கட்சி இனி எதனைப் பெரிதாகச் சாதித்துவிடப் போகிறது?

தமிழர்களுக்கு அற்ப, சொற்ப உரிமைகளையும் வழங்கக் கூடாது என்பதில் அக்கறையாக உள்ள சிங்கள-பௌத்த பேரினவாதம் சிங்கள ஆணைக்குழு மூலம் ஒரு புறத்தில் தீ நாக்கை நீட்டிப் பார்த்தது.

இப்போது ஐக்கிய தேசியக் கட்சி ஊடாக தடைக்கல்லைப் போடுவதற்கு முயற்சிக்கிறது.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போதெல்லாம் எதிர்த்தரப்பினர் தடுத்து விடுவது, குழப்பி விடுவது வழமை நிகழ்வாகிவிட்டது.

இலங்கையின் இந்தச் சாபக்கேடு எப்போதேனும் விலகிப் போகும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை!

---

அம்பாறை சென்றல் முகாம் சம்பவம்:

# 2ம் கட்ட அடையாள அணிவகுப்பில் பொலீஸார் சமுகமளிக்கவில்லை

## பாதுகாப்பு பிரச்சினை காரணமாம்

மட்டக்களப்பு, ஒக். 26

அம்பாறை சென்றல்முகாம் 4 ஆம் கொலனியில் தமிழ்க் கிராமவாசிகள் படுகொலைகள் தொடர்பான 2 ஆம் கட்ட அடையாள அணிவகுப்பு நேற்று கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற இருந்தது.

எனினும் இந்த அடையாள அணிவகுப்பில் பொலீஸார் எவரும் சமுகமளிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பாதுகாப்புக்காரணங்களுக்காக ஆஜராக முடியாதிருப்பதாக பொலீஸ் தரப்பில் நேற்று அறிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை முதலாம் கட்ட அடையாள அணிவகுப்பில் பொலீஸ் கான்ஸ்டபிளொருவர் அடையாளம் காட்டப்பட்டார் என்பது தெரிந்ததே. (இ-21)

## மிதிவெடியில் சிக்கிய பசு மாடு

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ்ப்பாணம் ரயில் நிலையப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவத்தில் பசுமாடு ஒன்று பின்னங்கால் கணுக்காலுடன் துண்டிக்கப்பட்டுக் காயமடைந்தது.

இந்த மாட்டுடன் இப் பகுதியில் மூன்று மாடுகள் மிதிவெடியில் சிக்கி உள்ளன.

(இ-15)

## நெடுந்தீவுக்கு மண்எண்ணெய்

நெடுந்தீவு, ஒக். 26

நெடுந்தீவு பல நோ. கூ. சங்கம் இலங்கை பெற்றோலியம் கூட்டுத் தாபனத்திடம் இருந்து ஆயிரத்து 600 லீற்றர் மண்எண்ணெயைக் கொள்வனவு செய்து நெடுந்தீவுக்கு எடுத்து வந்துள்ளது.

இதனால் சில தினங்களாக நெடுந்தீவில் நிலவிய மண்எண்ணெய்த் தட்டுப்பாடு நீங்கியது.

பங்கீட்டு அட்டைக்கு 5 லீற்றர் படிமண்ணெண்ணெய் வழங்கப்படும் என சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ-111)

வீடமைப்பு வசதிகள் குறித்து

# இந்திக குணவர்த்தனாவை சித்தார்த்தன் சந்தித்தார்

யாழ்ப்பாணம், ஒக். 26

புளொட் அமைப்பின் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கடந்த புதன்கிழமை வீடமைப்பு, நிர்மாணத்துறை அமைச்சர் இந்திக குணவர்த்தனவைச்சந்தித்து சில கோரிக்கைகளை விடுத்துள்ளார்.

நாவற்குழியில் கடந்த பல ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டு எவருக்கும் வழங்கப்படாத சேதமடைந்த நிலையிலுள்ள — 298 வீடுகளை திருத்தி அப்பகுதியில் வீடில்லாத மக்களுக்கு வழங்குமாறும் —

குருநகர் வீடமைப்புத் திட்டத்தில் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ள வீடுகளை திருத்திக் கொடுக்குமாறும் —

கொட்டடி கண்ணாபுரம் வீடமைப்புத் திட்டப்பகுதியில் வீடில்லாத நிலையில் வாழும் சுமார் முப்பது வறிய குடும்பங்களுக்கு வீடமைப்பு வசதிகளைச் செய்துகொடுக்குமாறும் இந்தச் சந்திப்பின் போது சித்தார்த்தன் அமைச்சரிடம் கேட்டுக் கொண்டார்.

இது குறித்து நடவடிக்கைகளை மேற்கொள்வதாக சித்தார்த்தனிடம் அமைச்சர் உறுதியளித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-5)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில்

# மேலும் 800 குடும்பங்களுக்கு ரூ. 5,000 கொடுப்பனவு

மல்லாகம், ஒக். 26

மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு வழங்கப்படுகின்ற 5 ஆயிரம் ரூபா கொடுப்பனவு நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் மேலும் எண்ணூறு குடும்பங்களுக்கு வழங்கப்பட உள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஏற்கனவே பல குடும்பங்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

சில கிராமசேவயாளர் பிரிவுகளில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் ஐம்பது வீதத்துக்கும் அதிகமான குடும்பங்களுக்கு இந் நிதி வழங்கப்பட்டுள்ள அதே சமயம் வேறு சில கிராம சேவையாளர் பிரிவுகளில் பத்து வீதமான குடும்பங்களுக்கே இந் நிதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை சில கிராம சேவையாளர் பிரிவுகளில் கடந்த நான்கு ஐந்து மாதங்களாக மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் கூட இன்றும் வழங்கப்படாமல் உள்ளன.

(ஐ-86-9)

# வடமராட்சி கிழக்கில் கண்டல்காடுகள் விசமிகளால் தீக்கிரை

செம்பியன்பற்று, ஒக். 26

வடமராட்சி கிழக்குப்பகுதியில் உள்ள கண்டல் காட்டுப் பகுதிக்கு விஷமிகள் சிலர் தீ மூட்டியுள்ளனர்.

இதனால் பெரும் பிரதேசத்தில் உள்ள கண்டல் பற்றைகள் தீக்கிரையாகியுள்ளன.

அப்பகுதியில் தொடர்ந்து நான்கு நாள்கள் பற்றைகள் தீப்பற்றி எரிந்ததை அவதானிக்க முடிந்தது.

இதனால் பரவிய புகை மண்டலம் மருதங்கேணி—பருத்தித்துறை வீதியால் பயணம் செய்தோருக்குப் பல அசௌகரியங்களை ஏற்படுத்தியது.

வடமராட்சி கிழக்கில் குடத்தனையில் இருந்து மாமுனை வரையான பெரும் பிரதேசத்தில் இந்தக் கண்டல் காடு அமைந்துள்ளது.

[ஐ]

# சோமஸ்கந்த கல்லூரியின் கட்டடத் திறப்பு விழா நாளை

யாழ்ப்பாணம், ஒக். 26

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினதும் நுண்கருத்திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் கட்டடத் திறப்பு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும்.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரகத்தினதும் மேற்படி பாடசாலைச் சமூகத்தினதும் ஒருங்கிணைந்த செயற்பாட்டால் கட்டி முடிக்கப்பட்ட இக் கட்டடம் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக வெளிக்கள அதிகாரி ஜோன் டிக்சனால் திறந்து வைக்கப்படும்.

இவ்விழாவில் யாழ். வலயம்-2 இன் கல்விப்பணிப்பாளர் சி. சிவராசா, யாழ்.செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கோப்பாய் பிரதேச செயலர், கோப்பாய் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்கள பொறியியலாளர் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-5)

## விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், ஒக். 26

யாழ். மாவட்ட விவசாய நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் வகையில் விவசாய உள்ளீட்டு விற்பனை நிலையங்கள் குடாநாடு முழுவதிலும் நிறுவப்படவுள்ளன.

இந்த வகையில் யாழ். கமநல சேவைத் திணைக்களத்தினால் திருநெல்வேலியில் இம்மாத முற்பகுதியில் விற்பனை நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தமக்குத் தேவையான சகல வகையான விவசாய உள்ளீடுகளையும் தேவையான அளவில் அங்கு பெற்றுக் கொள்ளலாமென கமநல சேவை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(ஐ-ரீ)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம், ஒக். 26

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ ஞானவைரவர் கோயில் பாலஸ்தாபனம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10.33 மணிமுதல் 12.03 மணிவரை நடைபெறும். இதனை ஒட்டிய வாஸ்து சாந்திக்கிரியைகள் இன்று மாலை 4 மணிக்கு நடைபெறும்.

[ஐ]

## அதிபர் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஒக். 26

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-152)

## நாளை

**ஐப்பசி 10**

திங்கட்கிழமை

திதி: ஏகாதசி

முற்பகல் 8.14 வரை.

நட்சத்திரம்: பூரம்

முன்இரவு 6.16 வரை.

ஏகாதசி விரதம்

சுபநேரம்: 12.03-1.33

ராகுகாலம்: 7.33-9.03

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சின்னம் சூட்டும் விழா

தென்மராட்சி, ஒக். 26

பளை கல்விக் கோட்ட சாரணீய ஆசிரியர்களுக்கான சின்னம் சூட்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை பளை மத்திய கல்லூரியில் கோட்டக் கல்வி அலுவலர் அ. கைலாயபிள்ளை தலைமையில் நடைபெற்றது.

விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மாவட்ட ஆணையாளர் மா. புவனேந்திரன் சின்னங்களைச் சூட்டினார்.

(இ-117)

## தென்னம் கன்று விநியோகம்

சண்டிலிப்பாய், ஒக். 26

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் சங்க எல்லைக்குள் வசிக்கும் பொது மக்களுக்கு தங்கள் வீட்டு வளவுகளில் நடுவதற்கேற்ற நல்லஇன தென்னம் பிள்ளைகளை மலிவு விலையில் விநியோகிக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

தென்னம் பிள்ளைகள் தேவைப்படும் பொது மக்கள் சங்கத்தலைமை அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்று சங்கத்தலைவர் தெரிவித்தார். (ஐ 135)

## இலவச மீட்டல் வகுப்புக்கள்

யாழ்ப்பாணம் ஒக். 26

ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன்கருதி கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான இலவச துரித மீட்டல் வகுப்புக்கள் உடுவிலில் நடைபெற்று வருகின்றன.

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்படும் இந்த இலவச வகுப்புக்கள் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் கிழமை நாள்களில் மாலை 3 மணிமுதல் நடைபெற்று வருகின்றன.

(ஐ - ரீ)

## சிறு கைத்தொழில் ஆரம்பிக்க முயற்சி

சண்டிலிப்பாய் ஒக். 26

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் 'போரூட்' நிறுவனத்தின் உதவியுடன் சிறு கைத்தொழில்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. இதற்கான செயற்றிட்டங்கள் தயாரிக்கப்பட்டு ''போரூட்'' நிறுவனத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும். அங்கீகாரம் கிடைத்தவுடன் சங்கம் சிறு கைத்தொழில்களை ஆரம்பிக்குமென்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 26

பரி.யோவான் முதலுதவிச் சங்கமும், படையும் பிரிவின் யாழ். கிராமிய மாவட்ட உறுப்பினர் கலந்துரையாடல் இன்று ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

புதிய நியமனம், வகுப்புப் பதிவு, வகுப்புவிரிவுரையாளர், பிரிவுப் பதிவு போன்ற விடயங்கள் இதில் கலந்து உரையாடப்படவுள்ளன.

கடந்த முதலாம் திகதிக்குப் பின் பதிவு செய்த பிரிவுகளின் பிரிவு அத்தியட்சகர்கள், உத்தியோகத்தர்கள் இதில் கலந்து கொள்வர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடாக்கடலூடாக

# குருநகர் நோக்கி வந்த சமயம் வள்ளத்தில் பிரசவித்த பெண்!

வன்னியில் இருந்து குடாக்கடலூடாக வள்ளத்தில் குருநகர் இறங்குதுறையை நோக்கி வந்து கொண்டிருந்த போது கர்ப்பிணிப் பெண் ஒருவர் வள்ளத்தினுள் பெண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் குடாக்கடலில் உள்ள கல்முனைக் கடலில் — வள்ளத்தில் — இந்தப் பிரசவம் இடம்பெற்றது.

நாவாந்துறை கடற்கரை வீதியைச் சேர்ந்த க. வசந்தராணி (வயது 25) என்ற பெண்ணே குழந்தையைப் பிரசவித்தவர் ஆவார்.

இவர்கள் பயணஞ்செய்த வள்ளத்தில் ஏற்பட்ட சிறிய துவாரத்தினூடாக வள்ளத்தினுள் நீர் உட்புகுந்ததைத் தொடர்ந்து இப்பெண்ணும் இவர் பிரசவித்த குழந்தையும் இவர்களுடன் வந்த இரு பெண்களும் குருநகர் மீனவன் ஒருவனால் மீட்கப்பட்டு குருநகர் இறங்குதுறைக்குக் கொண்டு வரப்பட்டனர்.

குழந்தையைப் பிரசவித்த பெண் வள்ளத்தின் மேற்புறத்தில் இருந்தமையால் வள்ளத்தினுள் புகுந்த கடல் நீரினால் குழந்தைக்குப் பாதிப்பு ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தாயும் சேயும் யாழ். போதனா வைத்தியசாலையின் மகப்பேற்றுப் பிரிவில் நேற்றுக் காலை சேர்க்கப்பட்டனர்.

தலை மறைவான

# சந்தேக நபரை அழைத்துவந்த இரு கிராம சேவையாளர்கள்

## சாவகச்சேரி நீதிவான் பாராட்டு

சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தினால் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு ஒருவருடமாக தலைமறைவாக இருந்த சந்தேக நபரை நீதிமன்றுக்கு அழைத்து வந்து ஒப்படைத்த இரண்டு கிராம அலுவலர்களின் கடமை உணர்வை நீதிவான் பாராட்டிய சம்பவம் கடந்த வாரம் சாவகச்சேரி நீதிமன்றில் இடம் பெற்றது.

நாவற்குளி கிராம அலுவலர் ஆ. நடராசா, அத்தியடி கிராம அலுவலர் எஸ். இரவீந்திரதாஸ், ஆகியோரே சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் அவர்களால் பாராட்டப்பட்டவர்களாவர்

சம்பவம் பற்றித்தெரியவருவதாவது

கடந்த வருடம் ஜூன் மாதம் 16ஆம் திகதி நாவற்குளி அரச வீடமைப்புத் திட்டத்தில் ஆறுமாத சிசுவைக் கத்தியால் குத்திக் காயப்படுத்தியதாகக் கூறப்படும் இதே இடத்தைச்சேர்ந்த ஒருவர் சாவகச்சேரி பொலீஸாரால் சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது சந்தேக நபரை ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார்.

பின்னர் நீதிமன்றத் தவணைகளுக்கு சமுகமளிக்காததால் பிடிவிறாந்து ஆணை பிறப்பிக்கப்பட்டதுடன் சந்தேக நபர் வசித்த பிரிவு கிராம அலுவலர் நீதிமன்றுக்கு அழைக்கப்பட்டு சந்தேக நபரை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு உத்தரவிடப்பட்டது.

நாவற்குளி கிராம அலுவலர் பிரிவிலிருந்து சந்தேக நபர் வெளியேறி அத்தியடி கிராம அலுவலர் பிரிவில் வசிப்பதாக அறிந்த நாவற்குளி கிராம அலுவலர் ஆ. நடராசா அத்தியடி கிராம அலுவலர் எஸ். இரவீந்திரதாஸின் உதவியுடன் சந்தேக நபரைப் பிடித்து நீதிமன்றில் ஒப்படைத்தனர்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே நீதிமன்ற நீதிவான் எஸ், ஏ. ஈ. ஏகநாதன் மேற்படி கிராம அலுவலர்களின் கடமை உணர்வினைப் பாராட்டினார். (இ-117)

வியாபார ஸ்தாபனங்கள்
தொழிற்சாலைகள்
பொது ஸ்தாபனங்கள்
ஆகியவற்றின்
1) கணக்காய்வு – AUDITING
2) B. T. T. – Tax Returns
3) மாதாந்த வருட கணக்குகள்
தயாரிப்பதற்கு நாடுங்கள்:-
AUDIT & ACCOUNTING CONSULTANTS
544, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சி/1883)

## பொதுநலவாய..

(முதலாம் பக்கத் தொடர்)

பொது நலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாட்டில் கலந்துகொள்ளும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்திலேயே இவர்கள் கலந்து கொண்டதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

பி. பி. ஸி. இது குறித்து மேலும் தெரிவித்ததாவது:-

ஆர்ப்பாட்டக்காரர்கள் இலங்கைத் தமிழர்களுக்கு ஈழம் என்ற தனித்தாயகம் கோருகின்றனர். தங்களின் தாயகப்பகுதி சிங்களப்படைகளால் பலாத்காரமாக ஆக்கிரமிக்கப்படுவதாக அவர்கள் கூறுகின்றனர்.

''நாங்கள் இங்கு கூடியிருப்பது பொதுநலவாய கூட்டத்தில் தமிழ்மக்களைப் பிரதிநிதிப்படுத்துவதற்காக'' என்று ஆர்ப்பாட்டத்திற் கலந்து கொண்ட சாந்தீபன் என்பவர் கூறினார்.

''ஈழம் எமது தேசியம் ஆகும். இந்தத் தேசியத்தின் கொடியை எடின்பரோவில் ஏற்றுவதென்பது எமது தேசிய அடையாளத்தை உலகுக்கு அறிவிப்பதாகும். இது பற்றி ஸ்ரீலங்கா அரசாங்கம் ஆத்திரமடைந்திருப்பது அதன் இனவாதப் போக்கையே குறிக்கின்றது. இதை உலகம் அறிந்து கொள்ளும் என்று நாம் நம்புகின்றோம்'' என்று சாந்தீபன் மேலும் கூறினார்.

இது புலிகள் இயக்கம் சார்பில நடத்தப்படும் பிரசாரவித்தை என்று இலங்கை அரசு அறிவித்துள்ளது பற்றி சாந்தீபன் கூறும் போது, ''இங்கு கூடியிருக்கின்ற தமிழ் அமைப்புகள் விடுதலைப் புலிகளின் முன்னணி அமைப்புகள் என்று கூறுவது மிகவும் பொருத்தமற்ற ஒன்றாகும். இங்கு வைத்தியர்கள், சட்ட வல்லுனர்கள் உட்பட பலர் உள்ளனர். இலங்கை அரசாங்கம் இதுபற்றி ஆத்திரமடைந்திருப்பது எமக்கு ஆச்சரியம் தரவில்லை என்றனர். (இ-5)

## படையினர்...

(முதலாம் பக்கத் தொடர்)

தேடுதல் நடைபெற்ற சமயம் பொலீஸாரும் கடற்படையினரும் வீடு, வீடாகச் சென்று விசாரணை நடத்தினர். அடையாள அட்டைகள் மற்றும் பயண ஆவணங்களை அவர்கள்சரிபார்த்தனர்

சுமார் ஆயிரம் கடற்படையினரும் 800 பொலீஸாரும் இந்தத் தேடுதலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு வடக்கு — முகத்துவாரம், மட்டக்குளி, கிராண்ட்பாஸ், தெமட்டகொட, கொட்டாஞ்சேனை, கொழும்பு தெற்கு — தெகிவளை, வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி, கிருலப்பனை ஆகிய இடங்களே இத்தேடுதலின் போது முக்கிய இலக்குகளாக இருந்தன.

பிரதானமாகவீடுகள், விடுதிகள், லொட்ஜ்கள், வர்த்தக நிலையங்களில் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படைப் பிரிவு உயர்தர வகுப்பு மாணவர் வேடத்தில் ஊடுருவல் செய்துள்ளதாகக் கிடைத்துள்ள தகவல் ஒன்றைத் தொடர்ந்தே இத்தேடுதல் நடத்தப்பட்டதாக பாதுகாப்புத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-5-21)

# மன்னார் - வவுனியா வீதி பாதுகாப்பு வலயம் மீது தாக்கு

## 6 படையினர் பலி; 7 பேர் காயம்

மட்டக்களப்பு, ஒக். 26

மன்னார் — வவுனியா வீதி பாதுகாப்பு வலயம் மீது நேற்று அதிகாலை 1.30க்கு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 6 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பறையனாளங்குளத்துக்கும், செட்டிக்குளத்துக்கும் இடைப்பட்ட பாதுகாப்பு வலயம் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் காயமடைந்த 7 இராணுவத்தினர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

இச்சம்பவத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் 3 விடுதலைப் புலிகளின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## சரத் முனசிங்க...

(முதலாம் பக்கத் தொடர்)

பேச்சாளர் சரத் முனசிங்க தெரிவித்தார்.

10 நாள்களுக்கு முன்னர் நடந்தது போல ஏதாவது ஒரு குண்டுத் தாக்குதல நடக்குமேயானால் அதனை எதிர்கொள்ள பாதுகாப்புப் படையினரை ஆயத்தப்படுத்துவதே இந்தத் தேடுதலின் நோக்கம் என்று அவர் தெரிவித்ததாக பி. பி. ஸி. தெரிவித்தது. (இ-5)

## கதிர்காமர்...

(முதலாம் பக்கத் தொடர்)

அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

அமெரிக்க அரசாங்கம்காட்டிய உதாரணத்தைப் பின்பற்றி விடுதலைப் புலிகளைத் தடைசெய்யப்பட்ட இயக்கமாக அறிவிக்கும்படி பிரிட்டிஷ் அரசிடம் தாம் கேட்கப் போவதாக அவர் கூறினார். (இ-5)

## நேற்று நண்...

(முதலாம் பக்கத் தொடர்)

அதேபோல் கொழும்பு நகருக்குள் வாகனங்கள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டது.

இதன் காரணமாக கொழும்பு நகருக்கு வெளியே கொழும்பு—கண்டி வீதி, கொழும்பு—காலி வீதி, கொழும்பு—இரத்தினபுரி வீதி ஆகியவற்றில் மூன்று கிலோமீற்றர் தூரம் வரை வாகனங்கள் வரிசையாய் நின்றன.

கொழும்பு நகரில் வீதிகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன. சகல ரயில் சேவைகளும் தேடுதல் முடிவடையும் வரை இடை நிறுத்தப்பட்டிருந்தன. (இ-5-21)

## 138 பெண்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)

இரவுவரை விடுவிக்கப்படவில்லை. விசாரணைகள் முடிவில் இவர்களும் விடுவிக்கப்படுவார்கள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பில் தங்கியிருப்பதற்கு காரணங்களைத் தெரிவிக்காமை. அவர்களால் தெரிவிக்கப்பட்ட காரணங்களில் திருப்தி ஏற்படாமை, அடையாளத்தை உறுதிப்படுத்த போதிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களாலேயே அவர்கள் விடுவிக்கப்படவில்லை என்று சிரேஷ்ட பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்படுவோர் எங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்பது குறித்து அவர்களது குடும்பங்களுக்கும் உறவினர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-5-21)

## தடுத்துவைக்கப்...

(முதலாம் பக்கத் தொடர்)

றுத்தலுக்கு உள்ளாகாமல் தடுப்பதற்கும் தேவையான சகல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்தார்.

தமிழ் மக்களுக்குத் தீங்கு ஏற்படுவதைத் தடுப்பதற்காகவே கொழும்பு நகரில் இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் நடத்தப்பட்டது.

நாடாளுமன்றத்தில் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அரசமைப்பு திருத்த யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் விடுதலைப் புலிகளால் கொழும்பு நகருக்கும்—குறிப்பாக தமிழ் மக்களுக்கும்—ஏற்படக்கூடிய அச்சுறுத்தலைத் தடுக்கின்ற நோக்கத்துடனேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இப்படி அவர் மேலும் கூறினார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் எவரும் துன்புறுத்தல்களுக்கு ஆளாகவில்லை என்பதை உறுதிசெய்ய தாமே பொலீஸ்மா அதிபருடன் சில பகுதிகளுக்கு விஜயம் செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுடன் உரையாடியதாகவும்—

இந்தத் தேடுதல் நடவடிக்கை காரணமாக எவருக்காவது குறைபாடுகளிருந்தால் அல்லது முறைப்பாடுகளிருந்தால் எந்த நேரத்திலும் பொலீஸ் திணைக்களத்துடன் அவசர தொலைபேசி இலக்கங்கள் மூலம் அவர்கள தொடர்பு கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

எத்திக்கிலும் உள்ள பலகோடி மக்களின் ஆதரவைப் பெற்ற
"ராசி சில்க்ஸ்" ஸ்தாபனத்தார்
தங்களின் 10 ஆவது ஆண்டு நிறைவின் சஞ்சாரத்தில் புதிய நிறுவனமான
"நல்லி சில்க்ஸ்" ஸ்தாபனத்தை
ஆரம்பித்துள்ளார்கள் என்பதை மனமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றார்கள்.
பண்டிகை வரும் நன்நாளில் பெண்டிர், ஆடவர், சிறுவர், பெரியவர் ஆடைத்தெரிவின் பட்டாடை உலகம்
சுபமுகூர்த்த - பட்டுப் புடைவைகளின் பெயர்பெற்ற ஒரே ஸ்தாபனம்
"ராசி சில்க்ஸ்"
70,71, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
"நல்லி சில்க்ஸ்"
121/1, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராணி தியேட்டர் அருகில்)
(சி/1865)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பண் மனையில் 26-10-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.